முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1001

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. பிரணவ சக்தியே அரங்கா வாழ்க
பிரணவ சித்தியே தேசிகா வாழ்க
சரவணச்சுடரேற்றி உலகை காக்க
சற்குருவாய் வந்த குருராஜனே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
தாழ்விலா சுபகிருது மிதுன திங்கள்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 12 நாள், 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
தண்டாயுதன் யானும் விளம்பிடுவேன்
3. விளம்பிட அரங்கனின் சக்தி
விசாலமாய் உலகமெங்கும் பரவி வர
கலங்கமற அரங்கன் சன்மார்க்கத்தை
கண்டு தெளிந்து ஏற்றுவந்த மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் இந்த கலியுகத்தின்
மகான்களாக உருமாறி சிறக்க நேரும்
நேர்மை கொண்ட அரங்கன் தர்மத்தை
நிலவுலகோர் ஏற்று தர்மம் செய்து வர
5. வருமுலகில் உலக வறுமையே அகன்றோடி
வளமும் பாதுகாப்பும் நிறைவான பூமியுமாக இந்த பேருலகம் காணும்
காணவே அரங்கனே கலி இடரை வெல்ல பிறந்த ஞானி
கண்டுகொண்டு உலகோர் ஞான வழி தேறி
6. ஞான தேசிகன் வாழ் ஓங்காரக்குடிலை நம்பி வந்து
நாளும் குடிலில் தொண்டு செய்து தர்மத்தில் பொருளுதவி செய்து
அரங்கா முருகா என ஜெபதபங்கள்
அனுதினம் போற்றி வருதல் காண
7. காணவே மாற்றம் உலகம் காணும்
கட்டாயம் அரங்கனால் உலகோர் ஞானவான்கள் ஆகி
வாட்டமில்லா பெரும்பேரும்
வல்லமையான ஞானவாழ்வும் கண்டு சிறப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–